# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Civil Procedure)

## அசல் வழக்கு எண். 59/2009

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பெரும்புதூர் 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 12ம் நாள் பி.வா.த.சா.1 (DW1) அவர்களுக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | **:** | **குபேந்திரன்** | **வயது** | **:** | **59** |
| **த/பெ.** | | **பட்டுநாயக்கர்** | **தொழில்** | | |
| **கிராமம்** | | **குன்றத்தூர்** | **தாலுக்கா** | | **குன்றத்தூர்** |

**பி.வா.த.சா.1 (DW1) முதல் நிலை விசாரணை தொடர்ச்சி:**

நான் இவ்வழக்கின் பிரதிவாதியாவேன். பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். (சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது.)

| **வ. எண்** | **Exhibits** | | **தேதி** | **ஆவணங்கள் விவரம்** | **அசல்/நகல்** |
|---|---|---|---|---|---|
| 1. | பி.த.சா.ஆ. 9 | **Ex.B-9** | 19.10.1976 | ஏல அறிக்கை - மாவட்ட பதிவாளர் கூட்டுறவு சங்கம் அவர்களிடம் இருந்து பெறப்பட்டது | அசல் |

குறுக்கு விசாரணை

1) சரசு அம்மாள் எனது தாயார் ஆவார். இவ்வழக்கில் பெரியதம்பி நாயக்கர் என்பவருக்கு தாவா சொத்து சொந்தமானது. 2004 ம் ஆண்டு எனக்கு எழுதிக்கொடுத்த செட்டில் மெண்ட் ஆவணத்தில் தாவா சொத்தானது பட்டா எண் 559 மூலம் பட்டு நாயக்கர் என்பவருக்கு உரிமை வந்தது என்றால் சரிதான். பட்டா எண் 559 பட்டு நாயக்கர் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.பிவதாசாஆ 9 முதலிலிருந்து என் வசம் இருந்தது. சர்வே நம்பர் 60/2 ல் உள்ள சொத்து சரசு அம்மாள் பெயரில் உள்ளது. சரசு அம்மாள் தற்போது உயிருடன் உள்ளார். சரசு அம்மாள் 2008 ம் ஆண்டு தாவா சொத்தில் இருந்து தான செட்டில் மெண்ட் பத்திரம் எழுதிகொடுத்துள்ளார்.

2) சரசு அம்மாள் என்பவருக்கு இந்த தாவா சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். 2008 ம் எனக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில் மெண்ட் பத்திரம் இந்த நீதிமன்றத்தல் தாக்கல் செய்யவில்லை. சரசு அம்மாளுக்கும் தாவா சொத்திற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை, தாவா சொத்தின் மீது அவருக்கு எந்த வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. சரசு அம்மாளுக்கு தாவா சொத்தின் மீது 1962 பாக பிரிவினை மூலம் உரிமை வந்தது என்றால் சரிதான். சரசு அம்மாள் திருமணத்திற்கு முன்பு தாவா சொத்தின் உரிமை வந்ததா என்றால் அது பற்றி

எனக்கு தெரியாது. பிவாதாசா 9 ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை எனது அம்மா செலுத்திவிட்டார்.தாவா சொத்தினை எனது அம்மா கூட்டுறவு வங்கியில் அடமானம் வைத்திருந்தார் அது பதிவு செய்த அடமானம் ஆகும். எந்த வருடம் அடமானம் வைத்தார் என எனக்கு தெரியாது. பிவாதசா 9 இவ்வழக்கிற்காக போலியாக தயாரிக்கப்பட்டது என்றால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்களில் உள்ள சொத்துக்களுக்கு எனது அம்மாவிற்கு எந்த வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

3) தாவா சொத்தானது புஞ்சை நிலம் அது எனது வீட்டிற்கு அருகாமையில் உள்ளது. தாவா சொத்தில் பயிர் செய்ததற்கான அத்தாட்சி எதுவும் இல்லை. பிவாதசா 9 தாவா சொத்திற்கு சம்பந்தம் இல்லாத ஒன்று என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை**.**

சாட்சி கையொப்பம் **: Sd/.** குபேந்திரன்**.**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.